# 2025 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை
# எல்லை நிர்ணய ஆணைக்குழு
# செலவுத் தலைப்பு - 025

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தாபன ரீதியான பின்னணி. | 1-4 |
| 2. | முன்னேற்றமும் தொலைநோக்கும் | 5-7 |
| 3. | ஆண்டின் மொத்த நிதிச் செயலாற்றுகை. | 8-18 |
| 4. | செயலாற்றுகை சுட்டி. | 19 |
| 5. | நிலையான அபிவிருத்தி நோக்குகளை (SDG) நிறைவேற்றிக் கொள்வதற்கான செயலாற்றுகை. | 19 |
| 6. | மனிதவள பின்னணி. | 20 |
| 7. | பொருத்தப்பாட்டு அறிக்கை. | 21-26 |

1. **தாபனத்தின் பின்னணி**

1.1 **அறிமுகம்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41(1) ஆம் உறுப்புரைக்கு அமைய, கௌரவ ஜனாதிபதி அவர்களால் 2023.05.19 ஆம் தேதி முதல் மூன்று ஆண்டுகள் காலப்பகுதிக்காக எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டது. அதன் தவிசாளரும், உறுப்பினருமாக கலாநிதி கே. தவலிங்கம் அவர்களும், ஏனைய இரு உறுப்பினர்களாக கலாநிதி திருமதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க அவர்களும், திரு. எம். ஐ. அமீர் அவர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அலுவலகம், நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகக் கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் முகவரி எல்லை நிர்ணய ஆணைக்குழு, நில அளவையாளர் நாயக அலுவலகக் கட்டிடம், த.பெ.இல.506, கொழும்பு-05 என்பதாகும்.

**எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நியமனம், அதிகாரங்கள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் பற்றிய நியதிச் சட்ட ஏற்பாடுகள்**

அரசியலமைப்பின்; 41 ஆ உறுப்புரையின் பிரகாரம் குறித்த ஏற்பாடுகள் பின்வருமாறு.

**41 ஆ**

(1) ஆளெவரும் பேரவையின் விதப்புரையொன்றின் மீதன்றி, இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களுள் எவற்றினதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக சனாதிபதியினால்; நியமிக்கப்படலாகாது.

(2) ஓராம் பந்தியின் ஏற்பாடுகள், அத்தகைய ஆணைக்குழு எதனதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனுமாள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்,.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் ஆணைக்குழுக்களின் தவிசாளர்களாக அல்லது உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கான தகுதியான மற்றும் உகந்த ஆட்களை அத்தகைய நியமனத்துக்கான சந்தர்ப்பம் எழுகின்ற பொழுதெல்லாம் சனாதிபதிக்கு விதந்துரைத்தல் பேரவையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விதப்புரைகள், பால் சமத்துவம் உட்பட வெவ்வேறு பல்லின சமுதாயங்களைப் பிரதிபலித்தலை உறுதிப்படுத்துவதற்கு முயற்சித்தலும் வேண்டும். அத்தகைய ஆணைக்குழுக்களின் தவிசாளர்களின் விடயத்தில், பேரவையானது நியமனம் செய்வதற்காக மூன்று ஆட்களை விதந்துரைத்தல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி விதந்துரைக்கப்பட்ட ஆட்களில் ஒருவரைத் தவிசாளராக நியமித்தலும் வேண்டும்.

(4) சனாதிபதி அத்தகைய நியமனங்களுக்கான பேரவையின் விதப்புரைகளைப் பெற்றுக் கொண்ட பதின்நான்கு நாட்களினுள், இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் தவிசாளர்களையும் உறுப்பினர்களையும் நியமித்தல் வேண்டும்.

(5) ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் ஆளெவரும் அல்லது ஏதேனும் அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராகப் பதிற் கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அகற்றப்படுதல் ஆகாது என்பதுடன், அத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிராதவிடத்து, பேரவையின் முன்னங்கீகாரத்துடன் மட்டுமே அத்தகைய ஆள் சனாதிபதியினால் அகற்றப்படுதலும் வேண்டும்.

(6) இவ்வுறுப்புரையின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா ஆணைக்குழுக்களும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாதலும் மறுமொழி கூறற்பாலதாதலும் வேண்டும்.

**அட்டவணை**

(அ) தேர்தல் ஆணைக்குழு.
(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு.
(இ) தேசிய பொலிசு ஆணைக்குழு
(ஈ) கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு
(உ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.
(ஊ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு.
(எ) நிதி ஆணைக்குழு
(ஏ) எல்லை நிர்ணய ஆணைக்குழு
(ஐ) தேசிய பெறுகை ஆணைக்குழு

**95**

(1) அரசியலமைப்புத் தொடங்கிய பின்னர் மூன்று மாதங்களுக்குள்ளாகத் தேர்தல் மாவட்டங்களை வரையறுப்பதற்காக சனாதிபதி வரையறை ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல் வேண்டும். அது சனாதிபதியினால் நியமிக்கப்படும் மூன்று ஆட்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும். அவர்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபடாதவர்களெனச் சனாதிபதி திருப்தியுறுதல் வேண்டும். அத்தகைய ஆட்களுள்; ஒருவரைச் சனாதிபதி தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரெவரும் இறந்தால் அல்லது பதவிதுறந்தால், அல்லது அத்தகைய உறுப்பினரெவரும் அத்தகையவராக அவரது பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராகிவிட்டாரெனச் சனாதிபதி திருப்தியுற்றால், இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீதும் சனாதிபதி அவரது இடத்தில் வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

**96**

(1) வரையறை ஆணைக்குழு இலங்கையை இருபதுக்குக் குறையாததும் இருபத்தைந்துக்கு மேற்படாததுமான தேர்தல் மாவட்டங்களாகப் பிரித்து அவற்றிற்குப் பெயர்களைக் குறித்தொதுக்குதல் வேண்டும்.

(2) இலங்கையின் மாகாணம் ஒவ்வொன்றும் அதுவே ஒரு தேர்தல் மாவட்டமாக அமையலாம் அல்லது மாகாணம் ஒவ்வொன்றும் இரண்டோ பலவோவாய தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படலாம்.

(3) மாகாணமொன்று பல தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படுமிடத்து, வரையறை ஆணைக்குழுவானது ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் ஒரு நிருவாக மாவட்டமாக இருப்பதனை, அல்லது இரண்டோ பலவோவாய நிருவாக மாவட்டங்களின் சேர்க்கையாக இருப்பதனை, அல்லது இரண்டோ பலவோவாய தேர்தல் மாவட்டங்கள் ஒன்று சேர்ந்து நிருவாக மாவட்டமொன்றாக இருப்பதனை இயலக்கூடிய அளவுக்கு உறுதிப்படுத்தும் வண்ணம் அப்போதுள்ள நிருவாக மாவட்டங்களைக் கருத்துக்கெடுத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள தேர்தல் மாவட்டங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து நான்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்து அனுப்புவதற்கு உரித்துடையனவாதல் வேண்டும் : (இது அத்தகைய தேர்தல் மாவட்டங்களின் தேருநர் இடாப்பில் தம் பெயர்களைக் கொண்டிருக்கும் தேருநர்களின் எண்ணிக்கையைத் தொடர்புறுத்திப் பார்க்கும் போது எத்தனை உறுப்பினர்களை அம்மாவட்டங்கள் தெரிவு செய்து அனுப்புவதற்கு உரித்துடையனவோ அத்தனை உறுப்பினர்களைவிடப் புறம்பானது) : வரையறை ஆணைக்குழுவானது அவ்வாறு ஒவ்வொன்றுக்கும் உரித்தாயுள்ள எண்ணிக்கையை அத்தகைய தேர்தல் மாவட்டங்களுக்கிடையில் ஒப்புரவான முறையில் பங்குபோடல் வேண்டும்.

(5) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரிடையே அபிப்பிராய வேறுபாடு உள்ளவிடத்து, அவர்களில் பெரும்பான்மையினரின் அபிப்பிராயமே மேலோங்கி நிற்றல் வேண்டுமென்பதுடன், அதுவே ஆணைக்குழுவின் முடிவாகக் கருதப்படுதலும் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் வித்தியாசமான அபிப்பிராயத்தை உடையவராயிருக்குமிடத்து, தவிசாளரின் அபிப்பிராயமே ஆணைக்குழுவின் முடிவெனக் கருதப்படுதல் வேண்டும். வேறுபடும் அபிப்பிராயங் கொண்ட உறுப்பினர் எவரும் அவ்வாறு வேறுபடுவதற்குத் தமக்குள்ள காரணங்களைக் கூறலாம்.

(6) வரையறை ஆணைக்குழுவின் தவிசாளர், ஆணைக்குழுவின் முடிவுகளை, வேறுபடும் அபிப்ராயங்களைக் கொண்ட உறுப்பினரால் கூறப்பட்ட காரணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றோடு சேர்த்து சனாதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்..

### 1.2 நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்

**நோக்கு**

நெறிமுறை மற்றும் நியாயமான கோட்பாடுகளின் அடிப்படையில் எல்லைகளை நிர்ணயம் செய்வதில் சிறந்து விளங்குதல்.

**பணிக்கூற்று**

அரசியலமைப்பினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவாறு சுயாதீனமாகவும், நெறிமுறையுடனும் நியாயமாகவும், வினைத்திறனுடனும், வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும், நம்பத் தகுந்ததாகவும் மற்றும் சட்டரீதியாகவும் எல்லைகளை நிர்ணயம் செய்தல்.

**நோக்கங்கள்**

- அனைத்து வாக்காளர்களுக்கும் அல்லது பிரசைகளுக்கும் உயர்ந்த அளவில் சமமான பிரதிநிதித்துவம் கிடைக்கத்தக்க விதத்தில் மற்றும் மக்களின் சனநாயக உரிமைகள் மற்றும் அந்நிலைமையை அதி பாதுகாப்புடனும் வினைத்திறனுடனும் உறுதிசெய்வதற்காக தேர்தல்கள் மாவட்டங்கள் மற்றும் ஏனைய நிருவாக அலகுகளின் எல்லைகளை நிர்ணயம் செய்தல்

- தேர்தல் மாவட்டம் அல்லது நிருவாக பிரதேசம் அல்லது கல்வி, சுகாதார அல்லது பாதுகாப்பு போன்ற சமூக - பொருளாதார சேவைகளுக்கான எல்லைகளை நிர்ணயம் செய்வதற்காகக் கையளிக்கப்படுகின்ற எல்லை நிர்ணய அலுவல்களை உரிய காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்தல்.

- அரசு மற்றும் வேறு நிறுவனங்களுக்கு சுய தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான எல்லை நிர்ணயங்களின் போது உரிய அறிவு மற்றும் தகவல்களை வழங்குதல்.

- எல்லைநிர்ணயம் தொடர்பான தகவல்கள் மற்றும் உரிய ஆவணங்களை ஒன்று திரட்டுகின்ற மத்திய நிலையமொன்றைத் தாபித்தல்.

- நீதியானதும், சுதந்திரமானதும் மற்றும் நம்பத்தகுந்ததுமான தேர்தல்களுக்கு முறையான, சரியான மற்றும் நியாயமான எல்லை நிர்ணயச் செயற்பாடொன்று அவசியமென்பதை பிரசைகள், அரசியல் கட்சிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினர்களுக்கும் அறிவுறுத்துதல்.

### 1.3 முக்கிய செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்

- அரசியலமைப்பின் 95 மற்றும் 96 ஆம் உறுப்புரைகளூடாக ஆணைக் குழுவின் பிரதான பணிகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன இருப்பினும் இவ்வாணைக்குழு தொடர்பான தொழிற்பாடுகள் மற்றும் தத்துவங்கள் என்ற விடயங்கள் அரசியலமைப்பில் குறிப்பீடு செய்யப்படவில்லை.

புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குகின்ற சந்தர்ப்பத்திலோ அல்லது அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்திலோ தனியான எல்லை நிர்ணய ஆணைக் குழுவொன்றை உருவாக்குவதற்கும், அதன் பொறுப்புக்களை விளக்குகின்றவிடத்து அனைத்து பூகோள ரீதியான எல்லை நிர்ணயங்களை மேற்கொள்வதை கொள்கையாக வகுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இதற்காக ஆணைக்குழுவுக்கான தத்துவங்களைக் கையளிக்கின்ற நியதிச் சட்டமொன்றை நிறைவேற்ற வேண்டியுள்ளதோடு, அதற்கான வரைபு நகல் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு முன்னடவடிக்கைகளுக்காக சனாதிபதி செயலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

### 1.4 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு

ஆணைக்குழு

தவிசாளர், உறுப்பினர்கள் 02

செயலாளர்

இணைப்புச் செயலாளர்

கணக்காளர்.

நிருவாக அலுவலர்

பணியாளர் குழுவினர்.

முகாமைத்துவ சேவை அலுவலர் 01

பணியாளர் குழுவினர

| | |
|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (வெற்றிடம்) | 03 |
| முகாமைத்துவ சேவை அலுவலர் | 01 |
| தகவல் தொழிநுட்ப அலுவலர் (வெற்றிடம்) | 02 |
| சாரதிகள். | 02 |
| அலுவலக உதவியாளர்கள் | 02 |

## 2. முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்ண

### 2.1 கூட்டங்கள்

2025.01.01 ஆம் தேதி முதல் 2025.12.31ஆம் தேதி வரை நிருவாக மற்றும் கொள்கை விடயங்களைக் கலந்துரையாடுவதற்காக 12 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| 13 ஆம் கூட்டம் | 2025.01.16 | 19 ஆம் கூட்டம் | 2025.07.28 |
| 14 ஆம் கூட்டம் | 2025.02.17 | 20 ஆம் கூட்டம் | 2025.08.19 |
| 15 ஆம் கூட்டம் | 2025.03.17 | 21 ஆம் கூட்டம் | 2025.09.22 |
| 16 ஆம் கூட்டம் | 2025.04.30 | 22 ஆம் கூட்டம் | 2025.10.14 |
| 17 ஆம் கூட்டம் | 2025.05.20 | 23 ஆம் கூட்டம் | 2025.11.11 |
| 18. ஆம் கூட்டம் | 2025.06.24. | 24 ஆம் கூட்டம் | 2025.12.16 |

### 2.2 தாபன ரீதியான பணிகள்

ஆணைக்குழுவின் அனைத்து அலுவலர்களினதும் தாபனப் பணிகளுடன் தொடர்புடைய அலுவலர்களின் தனிப்பட்ட கோப்புக்களைப் பேணுதல் உள்ளிட்ட அனைத்து தாபனப் பணிகளையும் ஆற்றுதல், ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் தாபனப் பணிகளை ஆற்றுதல், ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 02 வாகனங்களுடன் தொடர்புடைய எழுத்துக் கோப்புக்களைப் பேணுதல், லீவு தொடர்பான எழுத்தாவணங்களைப் பேணுதல் மற்றும் அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைப் பணிகளோடு தொடர்புடைய பதிவேடுகளைப் பேணுதல் என்பன நடைபெறுகின்றன.

இதற்கு மேலதிகமாக ஜனாதிபதி செயலகம், பிரதம மந்திரி அலுவலகம், இலங்கைப் பாராளுமன்றம், அரசியலமைப்புப் பேரவை, பொது நிருவாக, உண்ணாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு மற்றும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வேறு நிறுவனங்கள் என்பவற்றுக்கு வழங்கப்பட வேண்டிய அறிக்கைகளை உரிய திகதிக்குள் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது.

### 2.3 நிதி நிருவாகம்

அனைத்து கொடுப்பனவுப் பணிகளும் உரிய பரிந்துரை மற்றும் அங்கீகாரத்துடன் கூடிய வகையில் நிதிப் பிரமாணங்களுக்கமைய முறையாக மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, பெறுகைப் பணிகளும், பண்டக் கணிப்பீட்டுப் பணிகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுத் திறைசேரியினால் கோரப்பட்டுள்ள அனைத்து அறிக்கைகளும் தகவல்களும் முறையாக வழங்கப்படலும் நிகழ்ந்துள்ளன.
மேலும் தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ள அறிக்கைகளை உரியவாறு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு கணக்காய்வு வினாக்களுக்கு உரிய பதில்களும் வழங்கப்பட்டுள்ளன.

### 2.4 செயலாற்றுகைகள்

#### 2.4.1. எல்லை நிர்ணயப் பணிகள் தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற தரப்பினரை அது பற்றி அறிவூட்டுவதற்கான தகவல் திரட்டொன்றைத் தயாரித்தல்.

எல்லை நிர்ணயம் தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டுவதற்காக ஆங்கில மொழியில் 4 கை நூல்கள் அச்சிடப்பட திட்டமிடப்பட்டிருந்தது இதன் கீழ் 03 கை நூல்கள் தொடர்பாக கீழ் குறித்தவாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

I) இலங்கையின் பாராளுமன்ற முறைமை தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய நூலொன்று "Evolution of Parliament System in Sri Lanka" என்ற பெயரில் ஆணைக் குழுவின் அங்கத்தவர்களால் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட ஒரு தொகைப் பிரதிகள் அச்சிடப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளிலும் தயாரிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

II) எல்லை நிர்ணய பணிகள் தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டும் நோக்கோடு, இலங்கையின் நிருவாக அலகுகள் தொடர்பாக "Administrative Unit in Sri Lanka" என்ற பெயரிலான ஆங்கில மொழியிலான வினா விடைக் கொத்தொன்று ஆணைக்குழு அங்கத்தவர்களால் தயாரிக்கப்பட்டதோடு, அதனையும் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது, தற்போதைக்கு ஆங்கில மொழியில் வரையறுக்கப்பட்ட தொகைப் பிரதிகளை அச்சிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, 1

III) "Evolution Local Government and Ward Base Delimitation in Sri Lanka" என்ற பெயரில் இலங்கையில் உள்ளூராட்சி முறைமை மற்றும் வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய ஒரு நூல் ஆங்கில மொழியில் வரையறுக்கப்பட்ட பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளிலான மொழி பெயர்ப்பு மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2.4.2 எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கான இணையத்தளமொன்றை உருவாக்குதல்

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு இணையத் தளமொன்று இதுவரை காணப்படவில்லையென்பதோடு, 2025 ஜூலை மாதத்தில் மிகக் குறைந்த செலவினமொன்றை மேற்கொண்டு இணையத்தளமொன்று உருவாக்கப்பட்டது. தற்போது ஆணைக்குழு தொடர்பான தகவல்களையும் பல்வேறு அறிவியல் தகவல்களையும் அதில் பதிவேற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனுடைய முகவரி http//delimitationcommission.blogspot.com என்பதாகும்.

### 2.4.4 2025 ஆம் ஆண்டின் சனத்தொகை மற்றும் வதிவிட கணக்கெடுப்புத் தரவுகளை ஒன்று திரட்டி தேவையானவாறு தயார்படுத்திக் கொள்ளல்

2025 ஆம் ஆண்டின் சனத்தொகை மற்றும் வதிவிட கணக்கெடுப்பின் போது இதுவரை வெளியிடப்பட்டுள்ள தரவுகளை எதிர்கால எல்லை நிர்ணயப் பணிகளுக்காக எளிதில் பயன்படுத்திக் கொள்ளத் தக்கவிதத்தில் தயார்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

### 2.4.5 தேர்தல் ஆணைக்குழுவின் வருடாந்த 'ஆய்வமர்வு 2025' நிகழ்வுக்காக ஆராய்ச்சிக் கட்டுரையை சமர்ப்பித்தமை

2025 நவம்பர் மாதம் 04 ஆம் தேதி நடைபெற்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் "வருடாந்த ஆய்வு அமர்வு 2025 " Annual Research Symposium 2025" நிகழ்வுக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் இரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

i) எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தவிசாளர் கலாநிதி கே. தவலிங்கம் மற்றும் அங்கத்தவர் எம்.ஐ. அமீர் ஆகியோரால் தயாரிக்கப்பட்டு தமிழ் மொழியில் "இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் பெண்களின் வகிபாகம்" என முன்வைக்கப்பட்ட அவ்வாராய்ச்சிக் கட்டுரை தேர்ந்தெடுக்கப்பட்டதோடு தவிசாளரால் அது சமர்ப்பணம் செய்யப்பட்டது.

ii) எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தவிசாளர் கலாநிதி கே தவலிங்கம் மற்றும் அங்கத்தவர் கலாநிதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க ஆகியோர் தயாரித்து ஆங்கில மொழியில் முன்வைக்கப்பட்ட " Women's Political Participation Ideals, Reality and challenges" என்ற ஆராய்ச்சிக் கட்டுரை ஆராய்ச்சி சஞ்சிகையில் பிரசுரிக்கப்படுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டது.

## 2.5 வளங்களின் மையம்

எல்லை நிர்ணயம் என்ற விடயத்தோடு தொடர்புடைய அச்சு மற்றும் இலத்திரனியல் ஆவணங்களின் சேகரிப்பை விரிவாக்கம் செய்யும் செயன்முறையில் ஆணைக்குழு தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது. எல்லை நிர்ணயத்தோடு தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தல்கள், அறிக்கைகள் , ஏனைய கடித ஆவணங்களின் பிரதிகள், பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளின் வரைபடங்களைக் கோருகின்ற தரப்பினர்களுக்கு அவற்றை வழங்குவதற்கும் ஆணைக்குழு தயாராக உள்ளது.

பி.பீ.சி.குலரத்ன.
செயலாளர் (பதில் கடமை)
எல்லை நிர்ணய ஆணைக்குழு

## 3. ஆண்டின் முழுமொத்த நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதி செயலாற்றுகை வெளிப்படுத்துகை.

ஏசீஏ- எப்

**2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025 | | குறிப்பு | உண்மை நிலை 2025 | உண்மை நிலை 2024 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 18,216,105 | 15,240,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 33,655 | 29,325 | ஏசீஏ-4 |
| 250,000 | முற்பணக் கணக்குகள் | | 303,688 | 246,488 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **18,553,448** | 15,515,813 | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **18,553,448** | 15,515,813 | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | **40,038** | 140,142 | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **18,513,410** | 15,375,671 | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | ஏசீஏ-2(ii) |
| 12,875,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 12,684,123 | 11,148,485 | ஏசீஏ-2(ii) |
| 5,825,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 4,941,551 | 4,238,557 | ஏசீஏ-2(ii) |
| - | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | ஏசீஏ-2(ii) |
| 18,700,000 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **17,625,673** | 15,387,042 | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| - | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | - | - | ஏசீஏ-2(ii) |
| 300,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 223,610 | - | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | திறன் விருத்தி | 14 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | ஏசீஏ-2(ii) |
| 300,000.00 | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **223,610** | - | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | **33,655** | 29,325 | ஏசீஏ-4 |
| 1,000,000 | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | **994,944** | 286,394 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **1,028,599** | 315,719 | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | 18,877,882 | 15,702,761 | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | (364,472) | (327,090) | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | (364,472) | (327,090) | ஏசீஏ-7 |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | | | ஏசீஏ-3 |

## 3.2 நிதி நிலைமை தொடர்பான வெளிப்படுத்துகை.

ஏசீஏ -பீ

**2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|---|
| நிதி சொத்துக்கள் அற்றது | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 2,884,516 | 2,660,906 |
| நிதி சொத்துக்கள் | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 1,494,282 | 803,026 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| மொத்த சொத்துக்கள் | | **4,378,798** | **3,463,932** |
| தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 1,494,282 | 803,026 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 2,884,516 | 2,660,906 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | - | - |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | **4,378,798** | **3,463,932** |

பக்க இலக்கம் ....... முதல் ..... வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் ....... முதல் ....... வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத் திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத் திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத் திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....................
தலைமைக் கணக்கெடுப்பு உத்தியோகத்தர்
பெயர் : பி. பி. சி. குலரத்ன
பதவி : செயலாளர்
திகதி : 2026.02.27

B. P. C. Kularatne
Secretary (Acting)
Delimitation Commission
Surveyor General's Office Building
Colombo - 05

.................
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:இ.ஜி.எஸ். சிசிர குமார
பதவி :கணக்காளர்
திகதி : 2026.02.27

E.G.S. Sisira Kumara
Accountant
Delimitation Commission
Surveyor General's Office building
Colombo - 05

## 3.3 நிதிப் பாய்ச்சல் தொடர்பான வெளிப்படுத்துகை.

ஏசீஏ- சீ

### 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2025 ரூபா | 2024 ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் * | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 365,021 | 256,140 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 18,216,105 | 15,240,000 |
| முற்பணங்களை அறவிடல் | 303,688 | 246,488 |
| வைப்புக்களின் பெறுகை | 33,655 | 29,325 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ) | 18,918,469 | 15,771,953 |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 17,560,773 | 15,290,092 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | - | - |
| மூலதனச் சொத்துகளின் புனரமைப்புஇ மூலதன மாற்றங்கள்இ திறன் வளர்ப்பு மற்றும் பிற மூலதனச் செலவினங்கள் | 223,610 | |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 65,449 | 26,000 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 40,038 | 140,142 |
| முற்பணக் கொடுப்பனவு | 994,944 | 286,394 |
| வைப்புக் கொடுப்பனவு | 33,655 | 29,325 |
| தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ) | 18,918,469 | 15,771,953 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ) | - | - |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ) | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| மூலதனச் சொத்துகளின் நிர்மாணம்இ கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுதல்கள் | - | - |
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ) | - | - |
| முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | - | - |
| தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ) | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ) | - | - |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ) | - | - |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ) | - | - |
| காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ) | - | - |
| ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி | - | - |
| டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி | - | - |

## 3.4 நிதி வெளிப்படுத்துகைக் குறிப்புகள்.

**அறிக்கையிடலின் அடிப்படை**

1) **தயார்படுத்தலின் நோக்கம்**

2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2025 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

3) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

4) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

6) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

7) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2025 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

* ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை உள்ளடக்கலாம் மற்றும் மாதிரிப்படிவங்களில் தேவைக்கேற்ப திருத்தங்களைச் செய்யலாம். அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் “அறிக்கையிடலின் அடிப்படை” என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்.

* அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே "அறிக்கையிடலின் அடிப்படை" இன் கீழ் வெளிப்படுத் தப்படவேண்டும்.

**3.5 வருமானங்களை ஒன்று திரட்டல் செயலாற்றுகை**

| வருமான குறியீடு | வருமான குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | திரட்டப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | முதல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை | இறுதி வருமான மதிப்பீட்டின் சதவீதமாக |
| - | - | - | - | - | - |

**3.6 குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுப் பயன்பாட்டு செயலாற்றுகை**

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் | | உள்ளபடியான செலவினங்கள் (ரூபா) | பயன் படுத்தப்பட்ட ஒதுக்கீடு இறுதி ஒதுக்கீடுகளின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | முதல் ஒதுக்கீடு (ரூபா) | இறுதி ஒதுக்கீடு (ரூபா) | | |
| மீண்டெழும் | 18,700,000.00 | 18,700,000.00 | 17.560,773.16 | 93.91% |
| முதலீட்டு | 300,000.00 | 300,000.00 | 223,610.00 | 75% |

**3.7 நி.பி. 208 க்கு அமைய வேறு அமைச்சுகள் / திணைக்களங்களின் முகவரென்ற வகையில் இவ்வாணைக்குழுவுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்**

| தொடரில | ஒதுக்கீடு கிடைத்த அமைச்சு/ திணைக்களம் | ஒதுக்கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடு | | உள்ளபடியான செலவினம் | பயன்படுத்தப்பட்ட நிதிஒதுக்கீடு வழங்கப்பட்ட இறுதி ஒதுக்கீடுகளின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|---|
| | | | முதல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| - | - | - | - | - | - | - |

**3.8 நிதி சாரா வருமானங்கள் அறிக்கையிடப்படுகின்ற செயலாற்றுகை**

| வருமான குறியீடு | குறியீட்டின் விபரம் | 2025.12.31 ம் தேதிய பண்டக் கணிப்பீட்டுக்கமைய நிலுவை ( ரூ.) | 2025.12.31 நிதி நிலை அறிக்கைக்கமைய நிலுவை (ரூ.) | எதிர்கால கணக்கியல் கடனுக்குரிய (ரூ | முன்னேற்றத்தை சதவீதமாக அறிக்கை இடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்கள், கட்டமைப்பு | - | - | - | - |
| 9152 | இயந்திரப் பொறிகள் | 2,884,516.45 | 2,884,516.45 | - | 100% |
| 9153 | காணி | - | - | - | - |
| 9154 | தொட்டுணர முடியாத சொத்துக்கள் | - | - | - | - |
| 9155 | உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | ஆற்றப்படுகின்ற பணிகள் | - | - | - | - |
| 9180 | வரி வழங்கப்பட்ட சொத்துக்கள் | - | - | - | - |

## 3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அவதாணிப்புக்கள்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } PIC/B/DC/2/25/1

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2026 මැයි 20 දින

DELIMITATION COMMISSION
22 MAY 2026
COLOMBO - 05

ප්‍රධාන ගණන්දීමේ නිලධාරී,
සීමා නිර්ණය කොමිෂන් සභාව

**ශීර්ෂය - 025 සීමා නිර්ණය කොමිෂන් සභාවේ 2025 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති සම්පිණ්ඩන වාර්තාව**

---

යථෝක්ත වාර්තාව සහ මූල්‍ය ප්‍රකාශනයේ භාෂාත්‍රයෙන් වූ මුල් පිටපත් මේ සමඟ එවා ඇත.

කේ.කේ.එස්.ජයකොඩි
නියෝජ්‍ය විගණකාධිපති
විගණකාධිපති වෙනුවට

පිටපත :- අධ්‍යක්ෂ ජනරාල්, රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | PIC/B/DC/2/25/1 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2026 මැයි 20 දින |

DELIMITATION COMMISSION
22 MAY 2026
COLOMBO - 05

ප්‍රධාන ගණන්දීමේ නිලධාරි
සීමා නිර්ණය කොමිෂන් සභාව

**ශීර්ෂය 025 - සීමා නිර්ණය කොමිෂන් සභාවේ 2025 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11 (I) උප වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති සම්පිණ්ඩන වාර්තාව**

**1. මූල්‍ය ප්‍රකාශන**

**1.1 මතය**

ශීර්ෂය 025 - සීමා නිර්ණය කොමිෂන් සභාවේ 2025 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්වය පිළිබඳ ප්‍රකාශය, එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය කාර්යසාධන ප්‍රකාශය හා මුදල් ප්‍රවාහ ප්‍රකාශනය සහ ප්‍රමාණාත්මක ගිණුම්කරණ ප්‍රතිපත්තිවලට අදාළ තොරතුරු ද ඇතුළත් මූල්‍ය ප්‍රකාශනවලට අදාළ සටහන්වලින් සමන්විත 2025 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ විධිවිධාන සමඟ සංයෝජිතව කියවිය යුතු ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(1) ව්‍යවස්ථාවේ ඇතුළත් විධිවිධාන ප්‍රකාර මාගේ විධානය යටතේ විගණනය කරන ලදී. 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ (සංශෝධිත පරිදි) 11(1) වගන්තිය ප්‍රකාරව සීමා නිර්ණය කොමිෂන් සභාව වෙත ඉදිරිපත් කරනු ලබන මෙම මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව මාගේ අදහස් දැක්වීම් හා නිරීක්ෂණයන් මෙම වාර්තාවේ සඳහන් වේ. 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(2) වගන්තිය ප්‍රකාරව ප්‍රධාන ගණන්දීමේ නිලධාරි වෙත වාර්ෂික විස්තරාත්මක කළමනාකරණ විගණන වාර්තාව යථා තාලයේදී නිකුත් කරනු ලැබේ. ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(6) ව්‍යවස්ථාව සමඟ සංයෝජිතව කියවිය යුතු 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 10 වගන්තිය ප්‍රකාරව ඉදිරිපත් කළ යුතු විගණකාධිපති වාර්තාව යථා කාලයේදී පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලැබේ.

